செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 321 நாள் : 4/6/18

# குழந்தை தொழிலாளர் சிறப்பு பயிற்சி மையத்தை

# மாவட்ட ஆட்சி தலைவர் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் 39 குழந்தை தொழிலாளர் சிறப்பு பயிற்சி மையம் நடைபெற்று வருகிறது. இதில், 763 குழந்தை தொழிலாளர்கள் (436 மாணவர்கள் 327 மாணவிகள்) இதில், பயின்று வருகின்றனர்.

இன்று மாவட்ட ஆட்சி தலைவர் திரு.சி.அ.ராமன்,இ.ஆ.ப, அவர்கள் காலை 9.00 மணியளவில் வேலூர் குப்பம் பகுதியை சேர்ந்த குளத்துமேடு குழந்தை தொழிலாளர் சிறப்பு பயிற்சி மையத்தை ஆய்வு செய்தார். உடன் திட்ட இயக்குநர் திரு.மு.இராஜபாண்டியன் மற்றும் திட்ட மேலாளர் திரு.எஸ்.கேசவன் உடனிருந்தார்கள். மாணவ/மாணவிகளிடம் தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசிப்பு திறன்களை ஆய்வு செய்தார் மற்றும் கைத்தொழில் கற்றுக்கொண்ட ஒயர் கூடைகள் மற்றும் கைத்தொழில் பயிற்சிகளை மாணவ/மாணவிகள் செய்து காட்டினார்கள். குழந்தை தொழிலாளர் மாணவ/மாணவிகளின் பெற்றொர்களிடமும் ஆய்வு செய்தார். இங்கு படிக்கும் மாணவ/மாணவிகள் தொடர்ந்து பொதுப்பள்ளியில் படிக்க வைக்க அறிவுரை வழங்கினார். இந்ஆண்டில், இப்பள்ளியில் 18 குழந்தை தொழிலாளர் (11 மாணவர்கள் 7 மாணவிகள்) படித்து வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளராக இந்த வருடம் 37 மாணவ/மாணவிகள் பொறியியல் மற்றும் கலை கல்லூரிகளில் படித்து வருகின்றனர். இவர்களுக்கு ஊக்க தொகையாக வருடத்திற்கு ரூ.6000/– வீதம் தமிழக அரசு வழங்கி வருகிறது. இதுவரை 134 குழந்தை தொழிலாளர் மாணவ/மாணவிகள் பொறியியல் மற்றும் கலை கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

வேலூர் மாவட்டம் குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாவட்டமாக மாற்ற மாவட்ட நிர்வாகம் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திட்ட இயக்குநர்

செ.ம.தொ.அலுவலர்,
வேலூர்– 9.